




# மருந்துகளின்றி சிகிச்சை



நோய் என்றாலே அடுத்து நம் நினைவுக்குத் தட்டுப் படுவது மருந்து தான். நோய்களை விரட்டியடிக்கும் தன்மைகளை மருந்துகளே கொண்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. இருப்பினும், புற்றுநோய், எய்ட்ஸ் போன்ற எதிரிகளை எந்த மருந்துகளாலும் விரட்டியடிக்க இதுவரை முடியவில்லை. பல ஆண்டுகளாக இவ்வியாதிகளுக்கு மருந்துகளைக் கண்டுபிடிக்கும் முயற்சி தொடர்ந்த வண்ணமே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வேளையில் 'ஹீளிங்' என்ற முறை நோய் தீர்க்கும் சக்தியாக இந்தியாவில் மிகவும் பிரபலமாக பரவி வருகிறது. ஹீளிங் என்பது மருந்துகளின்றி நோயைக் குணப்படுத்தும் ஒரு விந்தையாகும். இவ்விந்தையின் நுணுக்கங்களை அறிந்த மாது ஒருவர், ஒருவரை நேரில் பார்த்து அவரிடம் உள்ள நோய்களைக் கண்டறியும் ஆற்றலைக் கொண்டுள்ளார். இந்தியாவைச் சேர்ந்த ரஸ்மி ஐயப்பா என்ற மாது, பிறக்கும் போதே இந்த அபூர்வமான சக்தியைக் கொண்டு இப்புவியில் தோன்றியுள்ளார். பிறகு, இச்சக்தியைக் கொண்டு உலக மக்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைப் புரிய வேண்டும் என்ற எண்ணத்துடன் பல மையங்களை உலகம் முழுவதும் தோற்றுவித்தார்.

Aashvasan Life Enhancement Services என்ற பெயரில் பத்துக்கும் மேற்பட்ட மையங்கள் பல நாடுகளில் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மையங்களிலும் ரஸ்மியின் இரண்டு அல்லது மூன்று தொண்டர்கள் ஹீளிங் முறையை மக்களிடம் அறிமுகப்படுத்தி வருகின்றனர். இந்தியாவில் மட்டுமின்றி இந்தோனேசியா, சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா இன்னும் பல நாடுகளில் இம்மையங்கள் இயங்கி வருகின்றன.

இதுவரை இவர்கள் பல நோய்களைக் குறிப்பாக புற்றுநோயை ஹீளிங் முறையைப் பயன்படுத்தி குணப்படுத்தியிருப்பதுக் குறிப்பிடத் தக்கது. நோயாளிகள் இவர்களிடம் சிலமுறை சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும். சில மாதங்களில் தங்களின் நோயின் குணத்தன்மை குறைவதை அவர்களாலே உணர முடியும்



என்று ரஸ்மியின் தொண்டரான ரேகா கூறினார்.

"ஒவ்வொருவரிடமும் எதாவது ஒரு நோய் இருப்பது சாத்தியமே. ஒருவரிடம் என்ன நோய் உள்ளது என்பதை ரஸ்மியால் அவர்களின் கண்களைக் கண்டே உணரமுடியும். ரஸ்மி சாமியார் அல்ல. அவரிடம் ஒரு சிறந்த அபூர்வமான சக்தி இருப்பதே உண்மை. ஆக, அவர் மேற்கொள்ளும் சிகிச்சையானது 100 சதவிகிதம் நன்மையே தரும் என்பது நிச்சயம்", என்றார் அவர்.

"புற்றுநோய் மட்டுமின்றி, மன உளைச்சலில் அவதிப்படுபவர், ஐம்புலன்களில் பிரச்சனைகளை எதிர்நோக்குபவர்கள், இரத்த கோளாரு, இனிப்பு நீர், சொறி சிரங்கு இன்னும் பல நோய்களைக் குணப்படுத்தும் சக்தி ரஸ்மியிடம் உள்ளது. எங்கள் மையங்களுக்கு வருபவர்களை ரஸ்மியால் எந்த இடத்திலிருந்தும் எங்களின் வழி காணமுடியும் அதன் பின்னர், அவர்களிடம் உள்ள நோயை அவரால் குறிப்பிட முடியும்", என்றார் அவர்.

தொடர்ந்து கூறுகையில், ஹீளிங் முறைப்படி சிகிச்சைகளை மேற்கொள்பவர்கள் எந்த ஒரு மருந்து மாத்திரைகளை உட்கொள்ள அவசியமில்லை. மருந்துகளின்றி நோய்களைக் குணப்படுத்துவதே எங்களின் முக்கிய நோக்கமாகும்.

"அதுமட்டுமின்றி, இந்த ஹீளிங் சிகிச்சை முறையானது சமய வழிபாடுகளுடன் தொடர்புடையதல்ல. ஆகையால் அனைத்து இனத்தவரும் இச்சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும் என்பது மறுப்பதற்க்கில்லை. மேலும் ரஸ்மியின் தொண்டர்கள் பலர் சீனர் மற்றும் கிறிஸ்துவர்கள் ஆவர். ஆகையால், இச்சிகிச்சையை சமயத்துடன் ஒப்பிடுதல் சரியல்ல", என்று ரேகா குறிப்பிட்டார்.

Aashwasan Life Enhancement Services மலேசியாவிலும் மிகவும் சிறந்த முறையில் இயங்கி வருகிறது. இந்நாட்டு மக்களும் அவர்களின் ஹீளிங் சேவையைப் பெற்று குணமடைய வேண்டும் என்பதே ரஸமியின் நோக்கமாகும். மேல் விவரங்களைப் பெற விரும்புவோர் www.aashwasan.com என்ற அகபக்கத்தை வலம் வரலாம். அல்லது 03-80614735 எனற எண்ணுடன் தொடர்பு கொண்டு மேல் விவரங்களைப் பெறலாம்.






விமர்சனம் April 2010